# தூது

நற்செய்தி துணுக்குகள்

சி. எஸ். ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

THAT THEY ALL MAY BE ONE — CHURCH OF SOUTH INDIA

## ஒன்றிப்பில் வளருவோம்

சகோதரரே, நீங்கள் எல்லாரும்
ஒரே காரியத்தைப் பேசவும்,
உங்களுக்குள்ளே பிரிவினைகள்
இல்லாமல், ஒரே மனதும் ஒரே
யோசனையும் உள்ளவர்களாய்
இணைந்திருக்கவும் வேண்டும்
என்று, நம்முடைய கர்த்தராகிய
இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே
உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

- 1 கொரிந்தியர் 1:10

செப்டம்பர் - 2026

(மடல் - 26) செய்தி - 8

# பொருளடக்கம்


ஆயர் மடல் ........ 1
ஆயரம்மா மடல் ........ 3
பெண்கள் பகுதி ........ 5
Children's Corner ........ 9
வேத வினாக்கள் ........ 22
கோதுமை மணி ........ 25
துணுக்குகள் ........ 27
ஆலயப் பக்கம் ........ 29




**"சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும்வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்." - 1 கொரிந்தியர் 1:10**

திருச்சபையின் உண்மையான வளர்ச்சி என்பது அதன் எண்ணிக்கையில் மட்டும் அளவிடப்படுவதில்லை. திருச்சபையின் உறுப்பினர்கள் கிறிஸ்துவில் எவ்வளவு ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்பதிலும் அளவிடப்படுகிறது. கொரிந்திய திருச்சபை வரங்களிலும், அறிவிலும் வளர்ந்திருந்தாலும், அவர்களுக்குள்ளே பிரிவினைகள் தோன்றியிருந்தன. எனவே, பவுல் அவர்களை மேலும் அறிவைப் பெறுவதற்கு முன்பாக, ஒன்றிப்பில் நிலைத்திருக்க அழைக்கிறார். **"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே"** என்ற வார்த்தைகள், இந்த ஒன்றிப்பின் அடித்தளம் கிறிஸ்துவே என்பதை வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்துவில் நாம் ஒரே குடும்பம், ஒரே சரீரம், ஒரே ஆவியால் இணைக்கப்பட்ட மக்கள். "ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு" என்று எபேசியர் 4:4 கூறுகிறது. ஆகவே, ஒன்றிப்பு என்பது மனிதர்களால் உருவாக்கப்படும் ஒரு உடன்படிக்கை அல்ல, கிறிஸ்துவில் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள ஐக்கியத்தை அன்புடனும், தாழ்மையுடனும் காத்துக்கொள்வதாகும். இதிலிருந்தே "ஒன்றிப்பில் வளருவோம்" என்ற நமது அழைப்பும் தொடங்குகிறது.

## 1. ஒரே காரியத்தைப் பேசுவோம் (Unity in Our Confession)

**"நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேசுகிறவர்களாயும்..." என்**று பவுல் கூறும்போது, எல்லாரும் ஒரே வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று கூறவில்லை. மாறாக, நம்முடைய விசுவாசத்தின் மையம் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கம். கிறிஸ்தவ திருச்சபையின் பொதுவான அறிக்கை, "இயேசு கிறிஸ்து ஆண்டவர்;" என்பதாகும். நம்முடைய கருத்துகள், பணிகள், பின்னணிகள் வேறுபட்டிருந்தாலும், நம்முடைய விசுவாசத்தின் மையம் கிறிஸ்துவாக இருக்க வேண்டும். "ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்" என்று எபேசியர் 4:5 நமக்கு நினைவூட்டுகிறது. மேலும், பிலிப்பியர் 2:2, "ஒரே மனமுள்ளவர்களாய், ஒரே அன்புடையவர்களாய்" இருக்க அழைக்கிறது. எனவே, திருச்சபையின் பேச்சு கிறிஸ்துவை உயர்த்தும் பேச்சாக இருக்க வேண்டும். மனிதர்களை உயர்த்தும் அல்லது பிரிக்கும் பேச்சாக இருக்கக்கூடாது. நம்முடைய வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் திருச்சபையை கட்டுகிறதா? அல்லது உடைக்கிறதா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். "ஒருவருக்கொருவர் பக்திவிருத்திக்கேற்றபடி பேசுங்கள்" (எபேசியர் 4:29) என்ற அழைப்பு, ஒன்றிப்பின் பேச்சு எப்படி இருக்க வேண்டும் என்பதை காட்டுகிறது. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரே விசுவாச அறிக்கை, ஒன்றிப்பான திருச்சபையின் முதல் அடையாளமாகும்.

## 2. பிரிவினைகளை விடுவோம்; (Unity Beyond Divisions)

**"உங்களுக்குள் பிரிவினைகள் இல்லாதவர்களாயும்..."** என்பது கொரிந்திய திருச்சபையின் உண்மையான பிரச்சினையைத் தொடுகிறது. அவர்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தபோதும், மனிதத் தலைவர்களை மையமாகக் கொண்டு பிரிந்தனர். இன்று கூட திருச்சபையில் கருத்து வேறுபாடுகள், தலைமுறை வேறுபாடுகள், பண்பாட்டு வேறுபாடுகள், தனிப்பட்ட விருப்பங்கள்

போன்றவை பிரிவினைகளாக மாறக்கூடிய ஆபத்து உள்ளது. ஆனால் கிறிஸ்துவின் சிலுவை நம்முடைய எல்லைகளை உடைத்து, நம்மை ஒரே குடும்பமாக்குகிறது. “அவர் இருவரையும் ஒன்றாக்கி, நடுவிலிருந்த பகைச்சுவரை இடித்துப்போட்டார;” (எபேசியர் 2:14). ஆகவே, கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது வேறுபாடுகள் இல்லாத நிலை அல்ல, வேறுபாடுகளுக்குள் கிறிஸ்துவின் அன்பில் இணைந்து வாழும் கிருபை ஆகும். கொலோசெயர் 3:13-14 மன்னிப்பையும், அன்பையும் அணிந்துகொள்ளச் சொல்கிறது. “இவைகள் எல்லாவற்றின் மேலும் பூரணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்” என்கிறது. எனவே, ஒன்றிப்பில் வளர வேண்டுமானால், “நான்” என்பதிலிருந்து “நாம்” என்ற வாழ்க்கைக்கு நகர வேண்டும். தனிப்பட்ட வெற்றியை விட திருச்சபையின் ஐக்கியம் மேலானது என்பதை உணர வேண்டும். கிறிஸ்துவின் அன்பு நம்மை இணைக்கும்போது, வேறுபாடுகள் பிரிவினையாக இல்லாமல் பலமாக மாறுகின்றன.

### 3. ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருப்போம் (Unity in Mind and Mission)

**“ஒரே மனமும், ஒரே யோசனையும் உடையவர்களாயும் இருக்கவேண்டுமென்று”** பவுல் அழைக்கிறார். இது வெறுமனே ஒரே கருத்தைக் கொண்டிருப்பதைப் பற்றியது அல்ல, தேவனுடைய சித்தத்தையும், கிறிஸ்துவின் பணியையும், ஒரே நோக்கத்துடன் முன்னெடுப்பதைப் பற்றியது. திருச்சபை ஒரே சரீரம் என்றால், அதன் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் எதிராக செயல்பட முடியாது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனி வரங்கள் இருந்தாலும், சரீரத்தின் நோக்கம் ஒன்று. “நாம் அநேகராயிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்கிறோம;” (ரோமர் 12:5). ஆகவே, நம்முடைய வரங்கள் வேறுபட்டிருக்கலாம் ஆனால் நம்முடைய இலக்கு ஒன்றாக இருக்க வேண்டும். இயேசு தமது சீஷர்களுக்காக ஜெபித்தபோது, “அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டும;” என்று ஜெபித்தார் (யோவான் 17:21). அந்த ஒன்றிப்பு வெறும் நம்முடைய நலனுக்காக அல்ல, உலகம் கிறிஸ்துவை அறியும்படியாக இருக்க வேண்டும். ஒன்றுபட்ட திருச்சபை ஒரு வலிமையான சாட்சியாகிறது. ஒரே மனம் கொண்ட மக்கள், ஒரே நோக்கத்திற்காக ஒன்றாக உழைக்கும்போது, தேவனுடைய ராஜ்யப் பணி முன்னேறுகிறது. எனவே, ஒன்றிப்பில் வளர்வது என்பது ஒன்றாக இருப்பது மட்டுமல்ல, ஒரே கிறிஸ்துவின் நோக்கத்திற்காக ஒன்றாகச் செயல்படுவதும் ஆகும்.

“அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டும்” (யோவான் 17:21) என்பதே CSI-யின் நோக்கமே “That they all may be one” என்ற அடிப்படை அழைப்பு நமக்கு கொடுக்கப்படுகிறது. CSI நிறுவப்பட்ட நாளை நினைவுகூரும் இம்மாதத்திலே 1 கொரிந்தியர் 1:10 நமக்கு வழங்கும் ஒன்றிப்பின் அழைப்பை புதுப்பிப்போம். கிறிஸ்துவில் ஒன்றுபட்டு, அன்பில் இணைந்து, ஒரே மனதுடனும், ஒரே நோக்கத்துடனும் செயல்படுவோம். நமது ஒன்றிப்பு திருச்சபையின் பலமாகவும், உலகிற்கு கிறிஸ்துவின் சாட்சியாகவும் அமையட்டும். ஒன்றிப்பில் வளருவோம் கிறிஸ்துவின் சாட்சியாக வாழ்வோம்.

**கடவுள் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.**

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : esp.rgt@gmail.com*

**இவண்**
**கிறிஸ்துவின் திருபணிவிடையாளன்**
**அருள்திரு.S.பிரபுதாஸ்**




இஸ்ரவேலின் வரலாற்றில் ஒரு இருண்ட காலம் அது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவனை விட்டு விலகியிருந்தார்கள். அதன் விளைவாக அவர்கள் எதிரிகளின் கைகளில் ஒடுக்கப்பட்டார்கள். சிசெரா என்ற படைத்தலைவனின் வலிமைக்கு முன்பாக இஸ்ரவேல் பலவீனமடைந்திருந்தது. அவனிடம் 900 இரும்பு இரதங்கள் இருந்தன. ஆனால் அந்த பயத்தின் காலத்தில் தேவன் ஒரு பெண்ணை எழுப்பினார். அவள் பெயர் தெபொராள். அவள் ஒரு தீர்க்கதரிசி. ஒரு நியாயாதிபதி. ஒரு தலைவி. ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி, அவள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, தேவனுடைய மக்களுக்காக நின்ற ஒரு ஜெபிக்கும் பெண். அவள் வாழ்ந்த காலத்தில் பிரச்சினை பெரியதாக இருந்தது. ஆனால் அவளுடைய தேவன் அதைவிடப் பெரியவராக இருந்தார். அவள் சூழ்நிலையைப் பார்த்து பயப்படவில்லை. அவள் தேவனைப் பார்த்து எழுந்தாள். அவள் மக்களின் பலவீனத்தைப் பார்த்து பின்வாங்கவில்லை. அவர்களை எழுப்புவதற்காக முன்னேறினாள். தெபொராளின் வாழ்க்கை நமக்கு ஒரு முக்கியமான உண்மையை கற்றுக்கொடுக்கிறது:

**ஜெபத்தின் மேன்மை**

தெபொராளின் வாழ்க்கையைப் பார்க்கும்போது, அவளுடைய மிகப்பெரிய சிறப்பு அவள் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தது மட்டுமல்ல. தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அந்த சத்தத்தின்படி வாழ்ந்த ஒரு பெண்ணாக இருந்தாள் என்பதுதான். இஸ்ரவேல் ஜனங்கள் எதிரிகளால் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, “தெபொராள் சூழ்நிலையின் சத்தத்தைவிட தேவனுடைய சத்தத்தைக் கேட்கத் தெரிந்தவளாக இருந்தாள்.” நியாயாதிபதிகள் 4:4—7-ல் அவள் பாராகை அழைத்து, தேவன் கொடுத்த கட்டளையை அறிவிக்கிறாள். இது நமக்கு ஒரு பெரிய ஆவிக்குரிய பாடத்தைக் கற்றுத் தருகிறது. வாழ்க்கையில் பிரச்சினைகள் பெரிதாகும்போது, பல நேரங்களில் நாம் எல்லாருடைய குரலையும் கேட்கிறோம் ஆனால் தேவனுடைய குரலைக் கேட்க மறந்துவிடுகிறோம். குறிப்பாக ஒரு பெண்ணின் வாழ்க்கையில் குடும்பப் பொறுப்புகள், பிள்ளைகளின் எதிர்காலம், கணவனின் தேவைகள், வேலை, ஊழியம், உறவுகளின் பிரச்சினைகள் என்று பல குரல்கள் அவளைச் சுற்றி இருக்கலாம். ஆனால் அவற்றின் நடுவில் தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் இருதயம் அவளுக்கு இருந்தால், அவள் தன்னுடைய பாதையை மட்டுமல்ல, தன்னைச் சுற் றியிருப்பவர்களின் பாதையையும் சரியாக வழிநடத்த முடியும். தெபொராளின் தன்னுடைய ஞானத்தை நம்பி முன்னேறவில்லை. தேவனுடைய வார்த்தையை நம்பி முன்னேறினாள். இன்று ஒரு பெண் தன் குடும்பத்திற்காக எவ்வளவு உழைத்தாலும், அவள் முதலில் தேவனுடைய சந்நிதியில் தன் இருதயத்தை அமைதிப்படுத்த வேண்டும். ஏனென்றால் ஜெபம் முதலில் சூழ்நிலையை மாற்றுவதற்கு முன்பாக, நம்முடைய பார்வையை மாற்றுகிறது. மனிதன் “இது முடியாது” என்று பார்க்கும் இடத்தில், ஜெபிக்கும் பெண் “என்னால் முடியாது” ஆனால் என் தேவனால் முடியும;” என்று சொல்ல ஆரம்பிக்கிறாள்.

**ஜெபத்தின் தாகம்**

தெபொராளின் ஜெப வாழ்க்கையின் இன்னொரு அழகான பக்கம் அவள் தனக்காக மட்டும் வாழவில்லை. நியாயாதிபதிகள் 5:6—9-ல் இஸ்ரவேலின் நிலைமை எவ்வளவு மோசமாக இருந்தது என்பதை அவள் நினைவுகூருகிறாள். மக்கள் பாதுகாப்பற்றவர்களாக இருந்தார்கள் . வாழ்க்கை பயத்தால் நிறைந்திருந்தது. அந்த நேரத்தில், “நான், தெபொராள் எழுந்தேன் இஸ்ரவேலில் ஒரு தாயாக எழுந்தேன;” என்று அவள் கூறுகிறாள். ஒரு தாயின் இருதயம் தனக்காக மட்டும் துடிக்காது, தன்னைச் சுற்றியிருக்கும் உயிர்களுக்காகவும் துடிக்கும். அதனால் தான் தெபொராளின் ஜெபம் ஒரு தனிப்பட்ட வேண்டுதலாக இல்லாமல், ஒரு தேசத்திற்கான மன்றாட்டாக மாறியது. இன்று நம்முடைய

ஜெப வாழ்க்கையும் இதேபோல இருக்க வேண்டும். "என் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும்" என்பதோடு நின்றுவிடாமல், "என் பிள்ளைகள் தேவனை அறிய வேண்டும், என் கணவர் தேவனுடைய வழியில் நடக்க வேண்டும் என் சபை எழுப்புதல் பெற வேண்டும், வாலிபர்கள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும், என் தலைமுறை தேவனைத் தேட வேண்டும்" என்று ஜெபிக்கத் தொடங்க வேண்டும். ஜெபத்தின் தாகம் என்பது நமக்காக ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும் என்ற ஆசையைத் தாண்டி, நம்முடைய வாழ்க்கையின் மூலம் மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்ற ஏக்கமாகும். ஒரு பெண் தன் பிள்ளைக்காக இரவில் அழுது ஜெபிக்கும்போது, அந்தக் கண்ணீர் அந்த வீட்டின் எதிர்காலத்திற்கான விதையாக மாறுகிறது. ஒரு மனைவி தன் கணவனுக்காக ஜெபிக்கும்போது, அவள் அவருடைய வாழ்க்கையில் தேவனுடைய கிருபைக்காக கதவைத் திறக்கிறாள். ஒரு தாய் தன் மகளுக்காக ஜெபிக்கும்போது, அவள் அடுத்த தலைமுறைக்காக ஆவிக்குரிய அடித்தளத்தை அமைக்கிறாள். ஒரு சபைப் பெண் சபைக்காக ஜெபிக்கும்போது, அவள் தன்னுடைய சபையின் எழுச்சியில் பங்கெடுக்கிறாள். பாரம் இருக்கும் இடத்தில் ஜெபம் பிறக்கும் ஜெபம் இருக்கும் இடத்தில் மாற்றம் பிறக்கும். ஜெபத்தின் தாக்கம் ஒரு தலைமுறையையே தொடும்.

**ஜெபத்தின் வல்லமை**

தெபொராளின் வாழ்க்கையில் ஜெபத்தின் வல்லமை மிகவும் தெளிவாக வெளிப்படுகிறது. இஸ்ரவேலுக்கு எதிராக சிசெராவிடம் 900 இரும்பு இரதங்கள் இருந்தன. மனித பார்வையில் அது ஒரு மிகப்பெரிய சக்தி. இஸ்ரவேலிடம் அந்த அளவிலான இராணுவ வலிமை இல்லை. ஆனால் தேவனுடைய பிள்ளைகளிடம் இருந்தது மனித ஆயுதத்தைவிட பெரிய ஒரு ஆயுதம் தேவனுடைய சந்நிதி. தெபொராள் பாராகிடம், "எழுந்துபோ...இது கர்த்தர் சிசெராவை உன் கையில் ஒப்புக்கொடுத்த நாள் இதுவே" என்று சொன்னபோது, அவள் எதிரியின் பலத்தைப் பார்த்துப் பேசவில்லை, தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பார்த்துப் பேசினாள். தங்கள் வாழ்க்கையில் தீர்க்க முடியாத பிரச்சினைகளோடு போராடிக் கொண்டிருக்கலாம். குடும்பத்தில் பிரச்சினை இருக்கலாம், பிள்ளையின் எதிர்காலம் குறித்து பயம் இருக்கலாம், பல ஆண்டுகளாக பதில் கிடைக்காத ஒரு ஜெபம் இருக்கலாம், மனிதர்களால் தீர்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கலாம் ஆனால் தெபொராளின் தேவன் இன்னும் மாறவில்லை. நம்முடைய கையில் என்ன இருக்கிறது என்பதைவிட, நம்முடைய கையை யாருடைய கையில் ஒப்படைக்கிறோம் என்பதே முக்கியம். ஜெபம் நம்முடைய கைகளில் எல்லா பதில்களையும் கொடுக்காமல் இருக்கலாம் ஆனால் நம்முடைய யுத்தத்தை தேவனுடைய கைகளில் ஒப்படைக்க கற்றுக்கொடுக்கிறது. 2நாளாகமம் 20:15, "யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது" என்று நினைவூட்டுகிறது. யாத்திராகமம் 14:14, "கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்" என்று உறுதியளிக்கிறது. எனவே, நம்முடைய வாழ்க்கையில் எதிரியின் "900 இரும்பு இரதங்களை" பார்த்து பயப்பட வேண்டியதில்லை. நம்முடைய தேவனைப் பார்க்க வேண்டும். பிரச்சினை பெரியதாக இருக்கலாம். ஆனால் பிரச்சினையைவிட நமக்குள் இருப்பவர் பெரியவர். கதவு மூடப்பட்டிருக்கலாம் ஆனால் கதவைத் திறக்கிறவர் தேவன். பதில் தாமதமாகலாம் ஆனால் பதில் தருகிறவர் தேவன். தெபொராள் எழுந்தாள் ஒரு தேசம் எழுந்தது. ஒரு பெண் ஜெபித்தாள் ஒரு தலைமுறை மாறியது. இன்றும் முழங்கால்படியிட்டு ஜெபத்தில், விசுவாசத்தில் நிற்கும் பெண்களை தேவன் தேடுகிறார். "கர்த்தாவே, என் வாழ்க்கையை மட்டுமல்ல, என்னைச் சுற்றியிருப்பவர்களின் வாழ்க்கைகளையும் மாற்றும் என ஜெபிக்கும் எழுப்புதலுள்ள ஜெபம் தேவை." அப்படிப்பட்ட ஜெபிக்கும்போது ஜெபம் குடும்பத்தை மாற்றும், சபையை உயிரடைய செய்யும். தலைமுறையை ஆசீர்வதிக்கும்.

**இறைபணியில்**
**ஆ. ஜெஸிந்தா பிரபுதாஸ்**
**ஆயர் அம்மா**



# வெவ்வேறு உறுப்புகள்; ஒரே சரீரம்!

## [1 கொரி. 12:4–27 அடிப்படையில் ஒரு கற்பனை விவாதம்]

**“சரீரம் ஒன்றாயிருந்தும் அவயவங்கள் அநேகமாயிருக்கிறது. சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும் ஒரே சரீரமாயிருக்கிறது.”**
— 1 கொரிந்தியர் 12:12

அன்று ஒரு அமைதியான மாலை நேரம். மனித சரீரம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று சரீரத்தின் உறுப்புகளுக்குள் ஒரு பெரிய வாக்குவாதம் தொடங்கியது. தங்களுக்குள் யார் பெரியவர் என்று அவை ஒப்பிடத் தொடங்கின.



**கண்:** “நான் இல்லாமல் இந்த சரீரம் என்ன செய்ய முடியும்? உலகின் அழகை பார்ப்பது யார்? பாதையைப் பார்த்து வழிநடத்துவது யார்? உண்மையில், நான்தான் மிகவும் முக்கியமானவன்!”



**காது:** “அவ்வளவு பெருமை வேண்டாம், கண்ணே! நீ பார்க்கலாம் ஆனால் நல்ல வார்த்தைகளையும், பாடல்களையும், தேவனுடைய வார்த்தையையும் கேட்பது யார்? என்னை இல்லாமல் இந்த சரீரம் எவ்வளவு விஷயங்களை இழந்துவிடும் தெரியுமா?”

**வாய்:** “இருவரும் சண்டையிடாதீர்கள்! பார்ப்பதும் கேட்பதும் மட்டும் போதுமா? பேசுவதும், உணவை உட்கொள்வதும் என்னுடைய வேலைதானே! கர்த்தரை நோக்கி ஜெபிப்பதும் துதிப்பதும் நானே.”



**கை:** “நீங்கள் எல்லோரும் உங்களுடைய முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால் நான் இல்லாமல் எத்தனை வேலைகளைச் செய்ய முடியும்? எழுதுவது, கொடுப்பது, உதவுவது, ஜெபத்தில் உயர்த்துவது—இவற்றில் என்னுடைய பங்கு இருக்கிறது.”

**கால்:** “நீங்கள் எல்லோரும் மேலே இருக்கிறீர்கள். என்னைப் பாருங்கள்! நாள் முழுவதும் காலணிக்குள் மறைந்துதான் இருக்கிறேன். யாரும் என்னைப் பாராட்டுவதில்லை. ஒருவேளை நான் இந்த சரீரத்திற்கு தேவையில்லாதவனாக இருக்கலாம்...”

அதைக் கேட்டதும் மற்ற உறுப்புகள் அமைதியாகின. **கால்** தொடர்ந்தது:



**கால்:** “நான் கண்ணைப் போல அழகாக இல்லை. கையைப் போல பல வேலைகளைச் செய்யவில்லை. காதைப் போல கேட்கவும் முடியாது. நாள் முழுவதும் இருட்டான காலணிக்குள் கிடக்கிறேன். எனவே, நான் முக்கியமில்லாதவன் என்று நினைக்கிறேன்.”

அப்போது **இதயம்** எல்லாரையும் அமைதிப்படுத்த வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.



**இதயம்:** ”எல்லாரும் கொஞ்சம் நான் சொல்வதைக் கேளுங்கள்! தேவன் நம்மை ஒரு பெரிய கண்ணாகவோ அல்லது ஒரு பெரிய காலாகவோ படைக்கவில்லை. அவர் நம்மைப் பல உறுப்புகள் கொண்ட ஒரே

சரீரமாகப் படைத்திருக்கிறார். நாம் வெவ்வேறு திறமைகளைக் கொண்டிருந்தாலும், நாம் அனைவரும் ஒரே சரீரத்தின் உறுப்புகளே (1கொரி.12:20). கண்ணே, நீ கையைப் பார்த்து எனக்கு நீ தேவையில்லை என்று சொல்ல முடியாது. தலையும் காலைப் பார்த்து நீங்கள் எனக்கு வேண்டியதில்லை என்று சொல்லக் கூடாது (1கொரி. 12:21). நம் காலில் ஒரு சிறிய முள் குத்தினால் கூட, கண் கலங்குகிறது, கை அதை எடுக்க ஓடுகிறது, வாய் ஐயோ என்று கத்துகிறது. நாம் எல்லாரும் சேர்ந்தே துன்பப்படுகிறோம், சேர்ந்தே மகிழ்கிறோம் (1 கொரி 12:26)."

அப்போது மூளை விழித்துக் கொண்டது.



**மூளை:** "நான் அனுப்பும் அறிவுறுத்தல்களின்படி நீங்கள் ஒவ்வொருவரும் செயல்படுகிறீர்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனி பணி இருந்தாலும், நாம் அனைவரும் ஒரே சரீரத்தின் உறுப்புகள்தானே! அப்படியிருக்க, உங்களுக்குள் ஏன் இந்தப் பிரிவினை?" என்று கேட்டது.

**பாடத்தைக் கற்றுக்கொண்ட அவயவங்கள்**

இதயமும் மூளையும் பேசியதைக் கேட்ட மற்ற எல்லா உறுப்புகளும் அமைதியாயின. கண், காது, வாய் தங்கள் பெருமையைக் குறித்து வெட்கப்பட்டன. கால் தான் எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்துகொண்டது. எந்த உறுப்பும் சிறியது அல்ல, எந்த உறுப்பும் தனித்து வாழ முடியாது என்பதை அவை உணர்ந்துகொண்டன.

**திருச்சபையும் இப்படித்தான்!**

அந்த அவயவங்களின் உரையாடல் நமக்கும் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொடுக்கிறது **திருச்சபை என்பது ஒரே மாதிரியான மனிதர்களின் கூட்டம் அல்ல.** ஒருவர் பாடுகிறார். ஒருவர் ஜெபிக்கிறார். ஒருவர் போதிக்கிறார். ஒருவர் குழந்தைகளை வழிநடத்துகிறார். ஒருவர் நோயுற்றவர்களை சந்திக்கிறார். ஒருவர் அமைதியாகப் பின்னால் இருந்து உதவுகிறார். வெளியில் தெரியாத ஒரு சிறிய ஊழியமாக இருந்தாலும், அது தேவனுடைய ராஜ்யத்தில் முக்கியமானதாக இருக்கலாம்.

எனவே, **"நான் முக்கியமில்லாதவன்"** என்றும் சொல்ல வேண்டாம். அதேபோல், **"என்னைத் தவிர யாராலும் இதைச் செய்ய முடியாது"** என்றும் சொல்ல வேண்டாம். நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் தேவை. நாம் தனித்தனி அவயவங்களாக இருந்தாலும், கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரம். அவரே திருச்சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். (கொலோசெயர் 1:18). எனவே, ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்கி, ஒருவருடைய வரத்தை மற்றவர் மதித்து, கிறிஸ்துவுக்குள் ஒன்றிப்பில் வளருவோம்!



"சமாதானத்தின் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுங்கள்."

— எபேசியர் 4:3

**ஜெபசீலி ஆசீர்**




## பிரியமானவள்

உலகத்தின் அநேக பாகங்களிலும், சமுதாயங்களிலும் வீடுகளிலும் பெண்கள் இரண்டாம் தர குடிமக்களாக மட்டுமே நடத்தப்படுகிறார்கள். ரோம ஆட்சிக் காலத்தில் தாங்கள் பெண்களாக பிறவாததற்காக ஆண்கள் தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள். பிள்ளைகளை பெற்றெடுப்பதும் வீட்டு வேலைகளை செய்வதுமான இயந்திரங்களை விட மேலானவர்களாக கருதப்படவில்லை. ஆனால் அவள் அதிகாலையில் எழும்பி, உணவு தயாரித்தல், பிள்ளைகளுக்குரிய கடமைகளை செய்தல், பாத்திரம் கழுவுதல், துணி துவைத்தல், கடைக்கு போய் பொருட்கள் வாங்குதல் இப்படி எல்லா வேலைகளையும் செய்தாலும், மிகவும் குறைவாகவே போற்றப்படுகிறாள். ஆனால் உன்னதப்பாட்டின் புஸ்தகத்தில் நம்மை **தமக்கு பிரியமானவள்** என அழைக்கிறார்.

**1. நாம் இருக்கிற வண்ணமாக நம்மை ஏற்றுக்கொண்டு நம்மை நேசிக்கிறார்:**

கணவன் தனது மனைவியை நேசிப்பது போல கர்த்தரும் நம்மை நேசிக்கிறார். அவரது உண்மை உண்மையானது, அளவிட முடியாதது. நாம் இருக்கிற வண்ணமாகவே நம்மை ஏற்றுக்கொள்கிறார். உன்.1:10-ல் ஆபரணாதிகள் பூண்ட உன் கன்னங்களும், ஆரங்கள் பூண்ட உன் கருத்தும் அழகாயிருந்தது. எனக்கு பிரியமானவள், திராட்சைத் தோட்டங்களில் முளைக்கும் மருதோன்றி பூங்கொத்து, என் பிரியமே, என் ரூபவதி,......... இன்னும் அதிகமாக வர்ணிக்கிறார். கன்மலையின் வெடிப்புகளில் நம்மை மறைத்து பாதுகாக்கிறார். அவர் வலதுகை நம்மை அணைக்கிறது. நாம் அவருக்கு பிரியமானவர்கள்.

**2. கர்த்தர் நம் உறவில் பிரியமாயிருக்கிறார்:**

நம்மைப் பார்த்து என் மணவாட்டியே எழும்பு. உன்னில் பழுதொன்றுமில்லை. நீ எழுந்து வா. நான் உன் முக ரூபத்தை பார்க்க விரும்புகிறேன். உன் சத்தத்தை

நான் கேட்க விரும்புகிறேன். உன் சத்தம் இன்பமும், உன் முகரூபம் அழகுமாயிருக்கிறது என்கிறார். நாம் அவரால் ஒதுக்கப்படுவதில்லை. அவருடைய மணவாட்டிகளாய் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். நாம் அவரை கனம் பண்ணினால் அவரும் நம்மை கனம் பண்ணுவார். கர்த்தர் நம் நடுவிலிருக்கிறார். அவர் வல்லமை உள்ளவர். அவர் நம்மை இரட்சிப்பார். அவர் நம் பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார். நமக்கு கீர்த்தியும், புகழ்ச்சியும் உண்டாகச் செய்வார். நாம் அவரோடு இருக்கிறோமா? இல்லை அவர் அன்பிலிருந்து தூரம் போகிறோமா?

**3. <u>கர்த்தர் நம்மை பாதுகாக்கிறவர்:</u>**

உன். 4:12,13 கூறுகிறது. நீங்களும் உங்களைச் சார்ந்த காரியங்களும் மறைவு கட்டப்படுகிறது. நம்முடைய உள்ளான காரியங்கள் போன்ற தனிப்பட்ட வாழ்வு, சிந்தனைகள் யாவும் அவரால் பாதுகாக்கப்படுகிறது. ஆண்டவருடைய பாதுகாப்பில் இருக்கும்போது, நாம் பயப்படவே வேண்டாம். உலகம் என்ன வேண்டுமானாலும் பேசினாலும் நாம் அப்பாவின் பாதுகாப்பில் இருக்கிறோம் என்ற நம்பிக்கை இருந்தால் போதும். நம்முடைய அரையைக் கட்டிக் கொள்வோம். நாம் விசேஷித்தவர்கள். நாம் நினைப்பதை விடவும் விலையேறப் பெற்றவர்கள்.

எந்த சூழ்நிலையிலும் மனம் சோர்ந்து போகாதபடி எல்லா சூழ்நிலையிலும் அவரோடுள்ள உறவில் தொடர்ந்து வளருவோம்!

**ஷர்மிளா ராஜேஷ்**






Dear Children, This September the theme is "**LET US GROW TOGETHER IN UNITY**".

Imagine a garden with many different plants. Each plant is different, but they all grow together in the same garden.



In the same way, God has made each of us different. We may have different gifts, personalities, and abilities, but we belong to one family in Jesus.

Eph. 4:3–6, says - We are called to live in unity; one body, one Spirit, one Lord, one faith.

We grow stronger when we love one another, forgive one another, help one another, and learn about God together.

## Tips for growing in Christian Unity

1. **Love One Another** ♡ - Be kind, caring, and friendly—even when someone is different from you."Love one another." — John 13:34
2. **Forgive Quickly** - When someone hurts or upsets you, choose to forgive instead of staying angry ."Forgive as the Lord forgave you." — Col. 3:13
3. **Help and Share** - Don't always think, "What can I get?" Ask, "How can I help?" Share what you have. "Serve one another in love." — Gal. 5:13
4. **Listen and Respect** - Let others speak, and listen to them. Every person is valuable to God."Be quick to listen, slow to speak." — James 1:19
5. **Choose Peace** - Don't start fights, arguments, or gossip. "Make every effort to keep the unity of the Spirit." — Eph. 4:3



## SAYING IT WITH PICTURES…




May the God who gives endurance and encouragement give you a spirit of unity among yourselves as you follow Christ Jesus, – Romans 15:5 NIV




Accept one another, then, just as Christ accepted you, in order to bring praise to God. – Romans 15:7 NIV

## BOOKS OF THE BIBLE #8: Ruth




**Author**: Possibly Samuel

**When It Happened**: About 1150–1140 BC

**Chapters**: 4

**Key People**: Ruth, Naomi, Boaz

**Summary**: This is the account of Ruth, whose love and commitment to the one true God of Israel led her to travel with her mother-in-law, Naomi, to a foreign land.

God rewarded Ruth for her faith when He provided a husband for her and provision for Naomi through Boaz, a close relative. Boaz is often referred to as the "kinsman-redeemer" and points to Christ who redeems lost sinners.




Ruth and Boaz became the great-grandparents of King David—and that same family would one day lead to Jesus Christ, the promised Messiah.

**About God**: God is sovereign in all things, and His purpose will be accomplished.

## TINY TOTS SECTION

### COLOR IN…






# LOVE OUR NEIGHBORS






**The Bible says in 1st Corin. – "Let there be no divisions among you…" Circle 9 things that do not belong in the Church.**

# Hidden Picture

These friends are helping each other study after school!
Can you find the hidden objects?



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "LET US GROW TYOGETHER IN UNITY"

1. What does the Bible teach in Ps. 133:1?

a. We should Compete. b. We should Separate.
c. We should live in Unity. d. We should Argue.

2. Who is the head of the Church? (Eph. 5:23)

a. Peter. b. Christ.
c. Paul. d. Moses.

3. What should believers do to keep unity? (Eph. 4:2-3)

a. Be Humble. b. Be Proud.
c. Be Selfish. d. Be Angry.

4. What does Paul say about the body of Christ? (1 Corin. 12:12)

a. It has one member. b. It has many members.
c. It has no members d. It has no leaders.

5. What should we do for one another (Gal. 5: 13)

a. Ignore each other. b. Serve one another.
c. Judge one another. d. Avoid one another.

6. What binds believers together in perfect unity? (Col. 3:14)

a. Money. b. Knowledge.
c. Love. d. Power.

7. What did Jesus pray for His followers? (John 17:21)

a. Wealth. b. Unity.
c. Fame. d. Power.

8. How should Christians treat one another? (Eph. 4:32)

a. With Kindness. b. With Hatred.
c. With Jealousy. d. With Pride.

9. What happens when believers work together in unity? (1 Corin. 12:25–27)

a. The Church becomes stronger. b. People become divided.
c. Love decreases. d. Faith disappears.

10. How can we grow together as believers? (1 Peter 4:10)

a. By serving one Another. b. By seeking Power.
c. By staying Alone. d. By causing Division.

11. What should Christians do when one member suffers? (Ephesians 6:16)

a. Ignore them. b. Rejoice.
c. Care for them. d. Leave them.

12. What should Christians be eager to maintain (Eph. 4:3)?

a. Wealth b. Unity. c. Fame. d. Power

**The Family in The Maze Wants to Be United. Find the Way for Each Family Member to Get to The Same Path, and to JESUS the HEAD OF THE HOUSE AND CHURCH!**



## The Motto of the CSI Church

### "THAT THEY ALL MAY BE ONE..."



## PARABLE DECODED #8: THE DIVIDED KINGDOM




"Every kingdom divided against itself will be ruined, and every city or household divided against itself will not stand." Matt. 12:25

While the context involved Jesus refuting the Pharisees' claim that He worked for Satan, he was delivering a foundational spiritual law about how relationships, communities, and ministries survive or self-destruct. This is applicable to how churches operate today.

For Christian teenagers navigating high school drama, social media cancel culture, and everyday academic tensions, Jesus' teaching offers essential instructions for growing together in true Christian unity.




## NOTICE THE UNITY OF THE BIBLE.




**The Bible was written over a period of 1,500 years.**

- **The Bible was written by over 40 different authors (Among them were kings, military leaders, peasants, philosophers, fishermen, tax collectors, poets, statesmen, musicians, scholars and shepherds.)**

- **The Bible is a book of great diversity, yet it unfolds a single unified story, the plan of Salvation for lost sinners which is revealed from Genesis to Revelation.**

## The Giant Redwood Trees



The huge redwood trees in California are considered the largest living things on earth and the tallest trees in the world. But the redwoods actually have a very shallow system of roots. So how do they get so big and stand so long?

Although it's a shallow root system; they all intertwine; they are locked to each other. So, when the storms come and the winds blow, the redwoods stand. And it's because they don't stand alone, for all the trees support and protect each other.

The same is true for the church. How will we stay strong and be able to withstand the storms? **By working together. If we do not stand together then we will surely fall apart.**

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

1. The theme for the month of September is: ______________________________.
2. The book of Ruth has ___________ chapters.
3. Rom. 15:5 says ________________________________________________________

   ________________________________________________________________________
4. What does the book of Ruth teach us about God?

   ________________________________________________________________________
5. The Motto of our church- the CSI Tamil Parish, Abu Dhabi is ________________

   __________________________
6. Complete the table from the 'Growing Together' infographics in the previous page

| The Divided Kingdom (Pitfalls) | The United Kingdom (Pathway) |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |

7. The Bible is a book of great diversity, yet it unfolds a single unified story,

   ________________________________________________________________________

   ________________________________________________________________________

**Dear Children, let us grow together in Unity with the help of the Holy Spirit.**

**God bless,**

**Mrs. Briliya Jeyaseelan.**

## Answers to July/ August Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – "TOWARDS STEADFAST FAITH"

1. a. Hope in God's Promises.
2. c. Patience.
3. d. Jesus.
4. b. Job.
5. c. Please God.
6. c. Mustard Seed.
7. c. Faith.
8. b. Peter.
9. c. Word of God.
10. c. People.
11. b. Faith.
12. a. Steadfast.

## Complete the Short Review Below...

8. The theme for the month of July- August is: **Towards steadfast Faith**.
9. The book of Judges has **21** chapters.
10. Heb. 12:2 says **Let us fix our eyes on Jesus, the author and perfecter of our faith,**
11. In **1812**, a devastating warehouse fire consumed **William Carey's** printing press. Carey did not despair. Instead, he **knelt**, thanked God for the **strength** to rebuild, and started over.

Note : Submit *hard copy* of your **Bible Quiz** answers to Pastor Uncle or Aunty on or before the **25th** of every month. Please make sure to write your name on the answer sheet. 🚫 Kindly **do not send** your answers via **WhatsApp.**

# MEMORY VERSE COMPETITION 2026

This year the Memory Verse Competition will be conducted during usual Junior church Timings. Date to be confirmed later.

**Beginners, Primary** and **Juniors** will need to recite their assigned memory verses, face to face, within the allocated time.

**Inters, Seniors** and **Super seniors** will need to come prepared to write the allotted portion from memory and recite the remaining memory verse portions orally. Time limit will be 1 hour.

## MEMORY VERSE PORTIONS FOR 2026

| SECTIONS | 2026 | | |
|---|---|---|---|
| | Portions | No. of Verses | Allocated Time |
| **Beginners A (kg. 1)** | **Philippians 4:13; Psalms 133 + (New Testament Books)** | **4 verses + (NT)** | **10 mins.** |
| **Beginners B (kg. 2)** | **Psalms 33:1 - 8 +<br>(Old Testament books)** | **8 verses + (OT)** | **10 mins.** |
| **Primary A (Gr. 1)** | **Psalms 119: 1 - 16** | **16 verses** | **15 mins.** |
| **Primary B (Gr. 2)** | **Psalms 34** | **22 verses** | **15 mins.** |
| **Primary C (Gr. 3)** | **Proverbs 3:1 - 25** | **25 verses** | **15 mins.** |
| **Juniors (Gr. 4; 5; 6)** | **Psalms 119: 1- 32 +<br>(Books of the old and new testament)** | **32 verses + [OT & NT]** | **20 mins.** |
| **Intermediates<br>(Gr. 7,8)** | **Psalms 118; Philippians 4** | **52 verses<br>[written - Ps. 118: 1-20]** | **1 hr.** |
| **Seniors (Gr. 9)** | **Psalms - 34; 31; 91; 131** | **65 verses<br>[written – Ps. 34]** | **1 hr.** |
| **Super Seniors A & B<br>(Gr. 10; 11; 12)** | **Psalms – 27; 96; 97; 125; 127; 133; 134; 136 +<br>(Books of the Old and New testament)** | **81 verses + [OT & NT]<br>[written – Ps. 136]** | **1 hr.** |

## Marking for Written Memory verse competition will be as follows

- 1 mark will be awarded for every correct and completed verse.
- No marks will be deducted for punctuations.
- 0.1 mark will be deducted for each spelling mistake and missing grammar.
- 0.25 marks will be deducted for every missing key word.
- 0.50 marks will be deducted for every 3 or more words missing (segment of a sentence)
- 1 mark will be deducted if there is no memory verse number, or if the order of the memory verses is interchanged. Partial verses will not be counted.
- Handwriting should be legible. No marks will be awarded, if the correcting teacher is unable to comprehend what is written.
- Final marks will be scored out of 10.

## Criteria for The Competition Awards will be as follows

| Level | Oral recitation | Written Competition |
|---|---|---|
| Outstanding | No prompts | 9.8 - 10 Marks |
| 1st Prize | 1 – 2 prompts | 8 – 9.8 Marks |
| 2nd Prize | 3 – 5 prompts | 6 – 7.9 Marks |
| 3rd Prize | 5 – 10 prompts | 4 – 5.9 Marks |
| Participation | For reciting incomplete no. of verses | Less than 4 Marks |



# வேத வினாக்கள்

## லேவியராகமம் முழுவதும்

(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. ஏழு ஓய்வு வருஷம் என்பது?
2. ஆரோன் குடும்பத்தார் யார்?
3. கர்த்தர் எங்கிருந்து மோசேயை கூப்பிட்டார்?
4. பஸ்கா பண்டிகை எப்பொழுது கொண்டாடப்பட்டது?
5. எது ஆசரிப்பு கூடார வாசலுக்கு முன்பாகக் கூடினது?
6. பரிசுத்த ஸ்தலத்தில் படைக்கப்பட்டதை யார் புசிக்கலாம்?
7. எத்தனை நாள் இரவு பகல் ஆசரிப்பு கூடார வாசலில் இருக்க வேண்டும்?
8. பிசைந்த மாவு எதற்குப் படைக்கப்பட்டது?
9. இஸ்ரவேல் ஜாதியான பெண்களின் பெயர் என்ன?
10. பழுதற்ற வெள்ளாட்டுக்கடா எதற்காகப் பலி செலுத்தப்படும்?
11. வயதான பழுதற்ற கன்றுக்குட்டி, ஆட்டுக்குட்டி எதற்காகப் பலி செலுத்தப்படும்?
12. கர்த்தருடைய சந்நிதியிலிருந்து என்ன புறப்பட்டது?
13. கர்த்தருக்குச் சுகந்த வாசனையானது எது?
14. குற்ற நிவாரண பலிக்குக் கொண்டு வரும் எண்ணெயின் பெயர் என்ன?
15. ஒரு கலம் வாற்கோதுமை விதைக்கிற வயல் எவ்வளவு பலனைத் தரும்?
16. 5 - 20 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் பெண் பிள்ளைகளை எப்படி ஒப்பிடுவார்கள்?
17. உன் பணத்தை எதற்குக் கொடுக்கக் கூடாது?
18. அப்ப மரக்காலில் மாவின் பங்கு எவ்வளவு இருக்க வேண்டும்?
19. கிளி ஜாதியாயிருப்பது எது?
20. பாவநிவிர்த்தி செய்யப்பட்ட பலியை யார் புசிக்கலாம்?
21. ........................ கொலை செய்யப்பட வேண்டும்?
22. தோளில் ரோகம் அதிகப்படாமல் சுருங்கியிருந்தால் அது என்ன?
23. கர்த்தர் ஆசீர்வாதத்தை அனுக்கிரகம் பண்ணின வருஷம் எது?
24. கர்த்தருக்குப் பலி செலுத்த யாருக்கு? எங்கே கற்பிக்கப்பட்டது?
25. கர்த்தருக்கு மனப்பூர்வமாக எதைச் செலுத்த வேண்டும்?

# ஜூலை & ஆகஸ்டு வேதவினாக்கள் – பதில்

## யாத்திராகமம் (முழுவதும்)

1. யோகேபேத் – யாத்திராகமம் 6:20
2. சிப்போராள் – யாத்திராகமம் 2:21
3. எத்திரோ – யாத்திராகமம் 3:1
4. ஓரேப் – யாத்திராகமம் 3:1-2
5. சர்ப்பம் – யாத்திராகமம் 4:3
6. மிரியாம் – யாத்திராகமம் 15:20
7. ஆரோன், ஊர் – யாத்திராகமம் 17:12
8. எத்திரோ – யாத்திராகமம் 18:17-24
9. சீனாய் – யாத்திராகமம் 19:20
10. ஓரேப் – யாத்திராகமம் 3:1-2
11. ஆரோன் – யாத்திராகமம் 32:4
12. நாதாப், அபியூ – யாத்திராகமம் 6:23
13. மூன்று மாதங்கள் – யாத்திராகமம் 2:2
14. ஆபிப் – யாத்திராகமம் 12:2
15. நிலைக்கால்களிலும் மேல்நிலைப்படியிலும் – யாத்திராகமம் 12:7
16. மாரா – யாத்திராகமம் 15:23
17. சீன் வனாந்தரம் – யாத்திராகமம் 16:1,14
18. ஓரேப் – யாத்திராகமம் 17:6
19. கேருபீன்கள் – யாத்திராகமம் 25:18
20. ஆறு கிளைகள் – யாத்திராகமம் 25:32
21. பெசலெயேல் – யாத்திராகமம் 31:2
22. அகோலியாப் – யாத்திராகமம் 31:6
23. நாற்பது நாள், நாற்பது இரவு – யாத்திராகமம் 24:18
24. பகலும் இரவும் – யாத்திராகமம் 13:21
25. ஆசரிப்புக்கூடாரம் – யாத்திராகமம் 40:34-35

*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும். தயவுசெய்து WhatsApp மூலம் பதில்களை அனுப்புவதை தவிர்க்கவும்.*

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**

## ஜூலை & ஆகஸ்டு மாத வேத வினாக்களுக்கான பதிலளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs. Adela Ezra
3. Mrs.Desigta Jaison
4. Mr.Emmanuel vanya(Ruwais)
5. Mrs.Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs. Goldina Thatcher
8. Mrs. Helen Arun
9. Mrs.Helen Sharmila Ray
10. Mrs.Hema RajaGuru
11. Mrs. Ida Robin
12. Mr.Jeba Jino
13. Mrs.Jasmine Sobha
14. Mrs.Jebaseeli Asir
15. Mrs.Dr. Jenila Gannraj.L
16. Mrs.Jacqulin Rani
17. Mr.Joslin Ananth .N
18. Mr.Jo Ernast
19. Mrs. Malar Ernast
20. Mr.Merlin Jeba Kinis
21. Mrs.Praveena Arun (Ruwais)
22. Mr.Prawin Durai Sam (Ruwais)
23. Mrs. prija samuel
24. Mrs. Preethi
25. Mrs.Priya Ranjith Kumar
26. Mrs.Persis John
27. Mrs.Peppin Jenson
28. Mr.Raja Guru Sekar
29. Mrs.Sarah Manuel
30. Mr.Salin Robert
31. Mrs.Sheeba Merlin
32. Mrs.Sheeba Herlin
33. Mrs.Sheneegah Stanly
34. Mrs.Sharmila Rajesh
35. Mrs.Selvi George
36. Mrs. Subi Kishor
37. Mrs. Subija Jino
38. Mrs.Sweetilin Frank
39. Mrs. Shajeethe Gracy
40. Mrs. Suni Smila Edwin
41. Mrs.Valentine Sharmila Paul
42. Mrs. Vithya Dinesh

## Children who answered July & August -2026 Quiz

1. Adelyn Victoria Jeyaseelan
2. Adonia Paul Arun
3. Alton kim Kinis
4. Albern
5. Aleina
6. Andrea kim Kinis
7. Anana Natalie
8. Benson Immanuel Raj
9. Clement Dave
10. Daniel Vanya (RUWAIS)
11. Danion Lemuel
12. Debi Lovisha
13. Defina
14. Diyas Dinesh
15. Effrin
16. Efrona
17. Evangelia Sharon
18. Evaniya Sherin
19. Evelyn Loria V
20. Giana Elin
21. Hadriel Adventier
22. Jadon Darius Ruwais]
23. Jabree Aaron
24. Jarick Aaron
25. Jaslin Shanna
26. Jaylan Paul Jino
27. Jeffrey Samuel
28. Jen Scudd
29. Jenessa Johnson
30. Jevlyn Ana
31. Jim Scott
32. Joanna Paul Jino
33. Joha Anit Manuel
34. Johan Sam Manuel
35. Johanan Paul Jino
36. Keren Tessa
37. Kavi yalini
38. Kavin Immanel
39. Kev Shannen P.S(Ruwais)
40. Leona Juliet
41. Leonel I.J. Stalin
42. Liana Erin
43. Linuel I.J. Sherwyn
44. Mishael Wesley
45. Selvajesvin (Ruwais)
46. Sherlyn Sana (Ruwais)
47. Starlyne Noble
48. Yedidiah Arun (Ruwais)
49. Yovaan jairus (Ruwais)



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

## அன்றைய தமிழகமும், கேரளாவும்!

தோமா ஊழியம் செய்த காலக் கட்டங்களில் இருந்த தமிழ்நாடு மற்றும் கேரளாவைப் பற்றிய சிறு கண்ணோட்டத்தை இங்கு காண்போம்.

அன்றைய தமிழ்நாட்டையும் கேரளாவையும் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். தோமாவின் காலங்களில் இப்பகுதி மிகுந்த செல்வ செழிப்புடன் காணப்பட்டது.

இங்கு வசித்த மன்னர்களும், வணிகர்களும், மிளகு, வாசனைப் பொருட்கள், யானைத் தந்தங்கள், முத்து, பவளம், மாணிக்கம், தங்கம், வெள்ளி, பட்டுத் துணிகள் முதலியவற்றை உலகின் பல்வேறு நாடுகளுக்கு கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்தனர். கி.மு.3000 முதல், கி.மு. 2000 வரை இங்கிருந்து எகிப்து தேசத்திற்கு பருத்தி உடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

கி.மு. 965-ல் அரசனான சாலொமோன், தங்கம், விலையுயர்ந்த ஆபரணங்கள், சந்தன மரங்கள், யானைத் தந்தங்கள், குரங்குகள் மற்றும் மயில்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தார் (1ராஜா.10:22). பாபிலோனின் அரசனான நேபுகாத் நேச்சாரும் தன் அரண்மனையைக் கட்டத் தேவையான தேக்கு மரங்களை எல்லாம் இங்கிருந்துதான் வாங்கினான்.

கி.மு.6ம் நூற்றாண்டில் வணிகம் செய்வதற்காக பல யூதர்கள் குடும்பத்தோடு இங்கு வந்து தங்கி இருந்தார்கள். 'பிலினி' என்கிற ரோம அரசனின் காலத்தில், இங்கு விளைந்த மிளகு, ரோம் நகரில் நூறு மடங்கு அதிகமான விலைக்கு விற்கப்பட்டது. கேரளாவிலிருந்து மிளகு மற்றும் இஞ்சி போன்ற பொருட்கள் பல வெளி நாடுகளுக்கு அதிகமான அளவு ஏற்றுமதி செய்யப்பட்டது.

ரோமாபுரியை ஆண்ட அகஸ்து ராயன் காலத்திலிருந்து நீரோ மன்னன் காலம் வரை ரோமர்கள் பயன்படுத்திய ஆயிரத்துக்கும் அதிகமான தங்க நாணயங்கள் கேரளாவிலுள்ள தோமா ஊழியம் செய்த பரூர் என்கிற இடத்தில் கி.பி.20ம் நூற்றாண்டின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய காலங்களில், மரங்களையும், இயற்கையையும், ஆவிகளையும், பாம்பையும்தான் இம்மக்கள் வணங்கி கொண்டிருந்தார்கள்.

**கொடுங்கல்லூர் சபை!**

கேரளாவில் கால் மிதித்த தோமா, அங்கிருந்து தன்னை அழைத்திருந்த திருவாஞ்சிக்குளம் அரசனைச் சந்தித்தார். தோமாவின் ஜெபத்தைக் கேட்டு, அரசனின் வாழ்க்கையிலும் கர்த்தர் பல அற்புதங்களைச் செய்தார். எனவே அந்த அரசனும், அவனோடு அரண்மனையில் இருந்த அனைவரும் இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்தனர்.

அந்த அரசன் தோமாவை தன்னோடு கூட அரண்மனையிலேயே வசிக்குமாறு கேட்டுக் கொண்டான். ஆனால் தோமாவோ, அன்புடன் அதை மறுத்ததோடு, "நான் வசிப்பதற்கு அரண்மனைக்கு வெளியே ஒரு சிறிய வீட்டைக் கொடுத்தால் போதும்" என்று சொன்னான்.

அந்த அரசன், தோமா தங்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்ததுடன், சுவிசேஷம் அறிவிப்பதற்கு தன் ராஜ்யத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று, ஜனங்களை கர்த்தருக்குள் வழிநடத்த அனுமதியும் வழங்கினான்.

தோமா அனுதினமும் கிராமங்கள்தோறும் சென்று, திரளான ஜனங்களுக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார். தோமா மூலமாக இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அற்புதங்களையும் அடையாளங்களையும் கர்த்தர் செய்து, தம்முடைய வசனத்தை உறுதிப்படுத்தி தமது நாமத்தை மகிமைப்படுத்தினார். இதன் மூலமாக அநேகர் இரட்சிக்கப்பட்டனர். அந்த அரசனுக்கும், இரட்சிக்கப்பட்ட சுமார் 3,000 பேருக்கும் தோமா ஞானஸ்நானம் கொடுத்தார்.

பின்பு அங்குள்ள கிரங்கனூர் என்கிற ஒரு பகுதியில் தன்னுடைய இனத்தை சேர்ந்த அநேக யூதர்கள் வசிப்பதைக் கண்டார். அங்கு யூதர்களுக்கான ஜெப ஆலயம் ஒன்றும் இருந்தது. அங்குள்ள யூதர்கள் தங்கள் இனத்தவரான தோமாவைக் கண்டு, மிகுந்த சந்தோஷப்பட்டதோடு, அவரை மிகுந்த அன்போடு விசாரித்தார்கள். தோமாவின் அன்புள்ளத்தையும், பரிசுத்தமான வாழ்க்கையையும் கண்ட அந்த யூதர்கள், தோமாவிடம் அதற்கான இரகசியத்தையும், அவரது போதனையையும் கேட்க, தங்கள் ஜெப ஆலயத்திற்கு அவரை அழைத்துச் சென்றனர். 1கொரி. 9:20ன் படி யூதரை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்படிக்கு, யூதர்களுக்கு ஏற்றபடி தோமா சுவிசேஷத்தை அறிவித்தார்.

தோமா, மிகவும் கொடூரமான குணத்தை உடைய யூதனாகிய தான், இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாக சாந்த குணமுள்ளவனாகவும், அவரது சீடராகவும் மாறியதைப் பற்றி அந்த யூதர்களின் மத்தியில் ஒரு சாட்சியாகச் சொன்னார்.

**- தொடரும்**




## என் மீட்பர் ரத்தம் சிந்தினார் [பாமாலை 339]
## (My hope is built on nothing less)

1. என் மீட்பர் ரத்தம் சிந்தினார்
மா நீதியும் சம்பாதித்தார்;
என் சொந்த நீதி வெறுத்தேன்
இயேசுவின் நாமம் நம்புவேன்;
நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்,
வேறஸ்திபாரம் மணல்தான்.

2. கார் மேகம் அவர் முகத்தை
மறைக்கும் காலம், அவரை
எப்போதும்போல நம்புவேன்
மாறாதவர் என்றறிவேன்
நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்,
வேறஸ்திபாரம் மணல்தான்.

**'கர்த்தரோ, எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலையுமாயிருக்கிறார்'. சங் 94:22**

வேத புத்தகத்தில் கன்மலையும், கற்பாறையும் உறுதிக்கும், அழியாமைக்கும் அடையாளமாகக் கூறப்பட்டுள்ளன. நமதாண்டவர் கற்பாறையின் மேல் கட்டப்பட்டிருக்கிற வீட்டையும், மணலின் மேல் கட்டப்பட்டிருக்கிற வீட்டையும் ஒப்பிட்டு, கற்பாறையின்மேல் வீட்டைக் கட்டுகிறவன் புத்தியுள்ளவன் எனக் குறிப்பிடுகிறார் (மத் 7:24). சத்துவமற்ற ஜெந்துவாயிருந்தும், தங்கள் வீட்டைக் கன்மலையில் தோண்டி வைக்கும் குழிமுசல்கள், ஞானமுள்ளவனுக்கு உதாரணமாகக் கூறப்பட்டிருக்கிறது (நீதி 30:26). ஆகவே, நமது விசுவாசமும், நம்பிக்கையும் உறுதியானதும், நேற்றும் இன்றும் என்றும் மாறாதவருமான இயேசு கிறிஸ்து என்னும் கற்பாறையின்மேல் அஸ்திபாரப்படுத்தப்பட வேண்டும். காலை நிலைகள் எப்படி மாறினாலும், வீட்டின் அஸ்திபாரம் கற்பாறையின் மேல் இருந்தால் அது சேதமடையாதது போல, நம் வாழ்க்கையில் எந்த நிலைமை ஏற்பட்டாலும், நாம் சோர்ந்துபோனாலும், மரணம் நம்மை ஆட்கொண்டாலும், நாம் நிற்கும் பாறை கிறிஸ்துவாயிருந்தால், நாம் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

இப்பாடலை எழுதிய எட்வர்ட் மோட் (Edward Mote) என்பவர் 1797ம் ஆண்டு, இங்கிலாந்தில் லண்டன் மாநகருக்கு அருகில் ஒரு சிறிய கிராமத்தில் எளிய பெற்றோருக்குப் பிறந்தார். மிகவும்

எளிமையான நிலையில் வாழ்க்கையை ஆரம்பித்து, இளமையில் கூலி வேலை செய்தார். பின்னர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, வேத சாஸ்திரப் பயிற்சியடைந்து, ஒரு பாப்ட்டிஸ்ட் சபையில் போதகராக அபிஷேகம் பெற்று ஊழியம் செய்தார். தமது ஊழியத்தின் கடைசி இருபது ஆண்டுகளாக ஸசக்ஸ் மாகாணத்தில், ஹார்ஷம் நகரில் (Horsham, Sussex) போதகராகப் பணியாற்றினார்.

ஆரம்பத்தில் அவர் தாழ்மையான நிலையிலிருந்தாலும், கிறிஸ்தவப் பாடல்கள் பாடுவதிலும், கவிகள் எழுதுவதிலும் அதிக ஆர்வமுள்ளவர். ஒருநாள் காலையில் அவர் வேலைக்குச் செல்லும்போது, ஓர் உண்மையான கிறிஸ்தவனின் ஆவிக்குரிய வாழ்க்கையின் அனுபவங்களைக் குறித்த ஒரு பாடல் எழுத ஆர்வம் கொண்டார். வேலை ஸ்தலத்தை அடையுமுன், ‘நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான், வேறஸ்திபாரம் மணல்தான்’ என்னும் பல்லவி அவர் மனதில் உருவாயிற்று. அன்று சாயங்காலத்துக்குள், முதல் நான்கு கவிகளையும் எழுதி முடித்தார். மறு ஓய்வுநாள் காலையில் 'லைல்’ என்னும் தெருவில் நடந்த ஓர் எழுப்புதல் கூட்டத்திற்குச் சென்றார். கூட்டம் முடிந்து வெளியில் வரும்போது, கிங் என்னும் அவரது நண்பர், சுகவீனமாயிருந்த தனது மனைவியைப் பார்க்க வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மறுநாள் காலையில், மோட் தனது நண்பரின் மனைவியைப் பார்க்கச் சென்றார். இவ்விதச் சந்திப்புகளில் அவர் முதலில் ஒரு பாட்டைப் பாடி, பின் வேதபாகம் வாசித்து ஜெபிப்பது வழக்கம். பாட்டுப்புத்தகத்தை தேடி, அது கிடையாதலால், அவர் புதிதாக எழுதிய ‘என் மீட்பர் ரத்தம் சிந்தினார்’ என்னும் பாடலை சட்டைப் பையிலிருந்து எடுத்து அதைப் பாடினார். நோயாளி அதைக் கேட்டு அதிக ஆறுதலும், அமைதியும் பெற்று, அப்பாடலின் ஒரு பிரதி வேண்டுமென்றார். அன்றிரவே மோட் கடைசி இரண்டு கவிகளையும் எழுதி, மரணப் படுக்கையிலிருந்த கிங் அம்மையாருக்கு அனுப்பினார்.

ஒரு நோயாளிக்கு இப்பாடல் மிகுந்த ஆறுதலை அளித்தது என்று கண்ட மோட், இப்பாடலின் ஆயிரம் பிரதிகளை அச்சிட்டுப் பலருக்கும் அனுப்ப, அவை மிகவும் பிரியமாக வரவேற்கப்பட்டன. பின்னர், ‘Spiritual Magazine” என்னும் பத்திரிக்கையிலும் இப்பாடல் பிரசுரமானது. மோட் ஆறு கவிகள் எழுதினார். ஆனால் நமது பாட்டுப் புத்தகங்களில் நான்கு கவிகள்தான் உள்ளன. 1836ல் அவர் இயற்றிய ‘ஸ்தோத்திரப் பாடல்கள்’ (Hymns of Praise) என்னும் புத்தகத்தில், ‘பாவியின் உறுதியான நம்பிக்கை’ என்னும் தலைப்பில் இப்பாடல் காணப்படுகிறது.

எட்வர்ட் மோட் 1874ம் ஆண்டு, தமது 77ம் வயதில் காலமானார்.




| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 4 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church Retreat |
| | | 8.30 pm – 10.30 pm | ஆசிரியர் தின சிறப்பு ஆராதனை & தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 6 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – ஆயர் இல்லம் |
| 8 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 11 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.30 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 13 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 15 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 18 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.30 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 20 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 22 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 25 | வெள்ளி | 8.30 pm – 10.30 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 29 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 30 | புதன் | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |




| 04-09-26 | |
|---|---|
| பாமாலை – 5 | எல்லாம் சிஷ்டித்த நமது |
| பாமாலை – 363 | நான் உம்மை முழுமனதால் |
| கீர்த்தனை – 121 & 127 | உன்றன் சுயமதியே நெறி என்று<br>குணப்படு பாவி தேவ |
| கீர்த்தனை – 248 | வந்து நல்வரம் தந்தனுப்பையா |
| 11-09-26 | |
| பாமாலை – 19 | எவ்வண்ணமாக கர்த்தரே |
| பாமாலை – 290 | நாங்கள் பாவ பாரத்தால் |
| கீர்த்தனை – 266 & 83 | ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே<br>இயேசுவின் நாமமே திருநாமம் |
| பாமாலை – 25 | கர்த்தாவே இப்போ உம்மைத் |
| 18-09-26 | |
| பாமாலை – 21 | சேனையின் கர்த்தா |
| பாமாலை – 253 | கர்த்தாவே யுகயுகமாய் |
| கீர்த்தனை – 208 & 219 | ஏற்றுக்கொண்டருளுமே தேவா<br>நித்தம் முயல் மனமே |
| கீர்த்தனை – 6 | சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம் |
| 25-09-26 | |
| பாமாலை – 24 | மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் |
| பாமாலை – 262 | என் மேய்ப்பர் இயேசு கிறிஸ்துதான் |
| கீர்த்தனை – 185 & 154 | இயேசு நேசிக்கிறார்<br>கிருபை புரிந்தெனை ஆள் |
| பாமாலை – 35 | எங்கள் ஊக்க வேண்டல் கேளும் |




| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **04-09-26** | கல்வி: சிந்தனையை வடிவமைத்து, வாழ்வை மாற்றுதல் | ஏசாயா 50:4-7 | தீத்து 2:1-10 | லூக்கா 5:1-11 | 119:9-16 |
| **11-09-26** | கடவுளை நம்பும் பெண்கள் | 2 இராஜா. 22:11-20 | ரோமர் 16:1-7 | மத்தேயு 15:21-28 | 18:1-19 |
| **18-09-26** | பன்முகத்தன்மை: நட்பும், நம்பிக்கையும் | எரேமியா 29:1-7 | ரோமர் 12:9-18 | லூக்கா 11:5-10 | 37:1-11 |
| **25-09-26** | சிறந்தவைகளை எதிர்பார்த்தல் | யோசுவா 14:6-13 | பிலிப்பியர் 3:12-16 | யோவான் 21:18-23 | 16 |




| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **01-09-25** | ஏசாயா | 1 : 1-16 | Hamdan |
| **08-09-25** | ஏசாயா | 1 : 17-31 | Muroor |
| **15-09-25** | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| **22-09-25** | ஏசாயா | 2:1-11 | Mussafah |
| **29-09-25** | ஏசாயா | 2:12-22 | Tourist Club |

# HAPPY BIRTHDAY

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 2 | Mrs. | Kishi Frene Mahear |
| 2 | Mr. | Arul Sugirson Samuel. K |
| 2 | Mrs. | Tamizhamudhini |
| 3 | Mrs. | Persis Rani |
| 3 | Master | Dhananidharan |
| 4 | Ms. | Emilyn Cynthia |
| 5 | Master. | Jim Scott |
| 5 | Master | Aaran Stefin |
| 6 | Mrs. | Helen Hema Geetha |
| 6 | Ms. | Steffi Priscilla |
| 6 | Mrs. | Christle Preethi Ansel |
| 6 | Mrs. | Goldina Thatcher |
| 7 | Rev. | Prabudoss |
| 7 | Mrs. | Rathibai Dennison |
| 7 | Mrs. | Elizabeth Juliet |
| 10 | Mr. | Jeya Mahear |
| 10 | Miss. | Nilani |
| 10 | Mr. | Sasi Kumar |
| 11 | Baby. | Pristina Samlyn |
| 12 | Mrs. | Tania Cecil |
| 14 | Mrs. | Maria Elizabeth Samuel |
| 14 | Master. | Jared Isaac Johnson |
| 14 | Mrs. | Benita W V |
| 15 | Ms. | Nijolin Jose Joseph Raj |
| 15 | Mrs. | Silvia Annie |
| 15 | Mrs. | Persis Seljah Manoharan |
| 15 | Baby | Thea Harel |
| 16 | Mr. | John Michael Franklin E. |
| 17 | Mr. | Julious Agastian |
| 17 | Mrs. | Merlin Jeba Kins |
| 19 | Mr. | Arnold A |

| Birth Date | Title | Name |
|---|---|---|
| **20** | Ms. | Sherlin Jerusha Getziyal. J |
| **20** | Mr. | Evanjin Vetha Raja |
| **20** | Baby | Danica |
| **21** | Mrs. | Sheeba Daniel |
| **21** | Mrs. | Geetha Leslie |
| **22** | Mr | Thiyagu Murugaraj |
| **22** | Mrs. | D. R. Ajita Steffia Liz |
| **22** | Mr. | Joe Vivek David |
| **22** | Mr. | Merlin Bright A M |
| **22** | Mrs. | Chelsea |
| **23** | Ms. | Edrina. R |
| **24** | Master. | Jonas Brendan. J |
| **24** | Mrs. | Baulin Jinilet |
| **25** | Ms. | Anita Josceline |
| **26** | Mrs. | Hema Alphonsa |
| **26** | Mrs. | Suni Smila |
| **28** | Mr. | Anti Grapeson D |
| **29** | Mrs. | Adlin Cherisha D J |
| **29** | Master | Oliver Franklin |
| **29** | Mrs. | Ashika Priscilla |
| **29** | Ms. | Jarrel Jenika |
| **30** | Mr. | Arul Mozhi Varman |
| **30** | Ms. | Angelin Mizpah |
| **30** | Mr. | Ezra Jeorld |
| **30** | Mrs. | Beena Kumari. R |
| **30** | Mr. | Stephenson |

# HAPPY ANNIVERSARY!



| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. & Mrs. | Davidraja Manimaran |
| 2 | Mr. & Mrs. | Jeya Seelan Gabriel |
| 2 | Mr. & Mrs. | Julian John |
| 2 | Mr. & Mrs. | Emmanuel Vanya. J.P |
| 2 | Mr. & Mrs. | Prince Trison |
| 5 | Mr. & Mrs. | Rejin Raj Manuel. R |
| 7 | Mr. & Mrs. | Ranjith Kumar. J |
| 9 | Mr. & Mrs. | S. Ebi Tenniyson |
| 10 | Mr. & Mrs. | Leslie Manohar Isaac. W |
| 11 | Mr. & Mrs. | Santhosamani |
| 14 | Mr. & Mrs. | Abish |
| 16 | Mr. & Mrs. | Solomon Satheesh |
| 25 | Mr. & Mrs. | Immanuel Stanly |
| 26 | Mr. & Mrs. | Ebinezer Prince S |
| 29 | Mr. & Mrs. | Sujil |
| 30 | Mr. & Mrs. | Joslin Ananth N. |
| 30 | Mr. & Mrs. | Samuel Jebaraj |

# GHAYATHI RUWAIS CHURCH

## IMPORTANT ANNOUNCEMENT

Praise the Lord, dear brothers and sisters!
We are joyful to announce that our Ghayathi Ruwais Church Anniversary and Harvest Festival will be celebrated separately on the dates listed below.
Thank you, and God bless you all!

### GHAYATHI RUWAIS ANNIVERSARY

12th September 2026

6:00 PM Service

### GHAYATHI RUWAIS HARVEST FESTIVAL

31st october 2026

Festival Time: Announcement Later

We kindly request your continued prayers and support. Thank you for celebrating with us.

*God bless you all!*

# 2026 Thanksgiving Season Schedule

GIVE THANKS UNTO THE LORD, FOR HE IS GOOD: FOR HIS MERCY ENDURETH FOREVER. - PSALM 136:1

| Every Friday | 4th September 2026 - 14th November 2026 | Flower Sale (Women's Fellowship) | |
|---|---|---|---|
| Day | Date | Silent Auction (Todah Festival) | Food Sale (Fellowship Feast) |
| Sunday | 20th September 2026 | Women's Fellowship | Outreach |
| Sunday | 27th September 2026 | Madinat Zayed & Ruwais | Muroor |
| Sunday | 11th October 2026 | Outreach Fellowship | TCA |
| Sunday | 18th October 2026 | Youth Fellowship | Al Wahda |
| Sunday | 25th October 2026 | Executive Committee | Musaffah |
| Sunday | 8th November 2026 | Men's Fellowship | Hamdan |
| Friday | 13th November 2026 | Harvest Festival Thanksgiving Service (Junior Church) | |
| Saturday | 14th November 2026 | Harvest Festival | |

# Fasting Prayer & Offertory Rota

| Month | Prayer Fellowship |
|---|---|
| **2026** | |
| September 2026 | Outreach |
| October 2026 | Musaffah |
| November 2026 | TCA |
| December 2026 | Al Wahda |
| **2027** | |
| January 2027 | Committee |
| February 2027 | Hamdan |
| March 2027 | Muroor |
| April 2027 | Musaffah |
| May 2027 | TCA |
| June 2027 | Al Wahda |
| July 2027 | Committee |
| August 2027 | Committee |

*"And let them sacrifice the sacrifices of thanksgiving, and declare his works with rejoicing." – Psalm 107:22 (KJV)*

# Executive Committee 2026-28



**Rev.S.Prabudoss**
**Presbyter & President**



**Mrs. Princy Catherine**
**Vice President**



**Mr.D.Antigrapeson**
**Secretary**



**Mr. Ansel Regi**
**Treasurer**



**Mr. Sunil Manuel Augustine**
**Warden**



**Mr. Dinesh.Y**
**Warden**



**Mr. Arul Sugirson Samuel**
**Member**



**Mr.S.Kishor Raj**
**Member**



**Mr.Manuel Yesudian**
**Member**



**Mrs.Goldina Thatcher**
**Member**



**Dr.Mrs.Jenila. L**
**Member**


ஒன்றிப்பில்
வளருவோம்
கிறிஸ்துவுக்குள்
நாம் எல்லாரும் ஒரே
சரீரமாயிருக்கிறோம். ரோமர் 12:5